1. நிதிக்கூற்றுக்கள்

1.1 மறுப்பு அபிப்பிராயம்

மில்கோ தனியார் கம்பனியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், மொழிப்பாக்கப்பட்ட முக்கிய கணக்கீட்டு கொள்கைகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயமொன்றை வெளியிடவில்லை. மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் கலந்துரையாடியுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயமொன்றிற்கான அடிப்படையொன்றை வெளியிட போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக் கொள்ள என்னால் முடியவில்லை.

1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனியின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வின் அடிப்படையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளரின் அறிக்கையை வெளியிடுவது எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும், மறுப்பு அபிப்பிராயம் எனும் பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்கள் காரணமாக இந்த நிதிக்கூற்றுகள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றை வெளியிட போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை என்னால் பெற்றுக் கொள்ள என்னால் முடியவிலலை.

1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	குறித்த நியமத்துடன் கூடிய இணக்காமைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 32 பந்தி பிரகாரம் நியமத்தால் இடமளிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களை தவிர சொத்துக்கள், வருமானம் மற்றும் செலவு மீதிகளை பதிலீடு செய்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்படக் கூடாத போதும் கடன்கொடுனர் மீதியினுள் காணப்பட்ட கூட்டுத் தொகை ரூபா 49,039,446 ஆன வரவு மீதியை இனங்கண்டு தேவையான செம்மையாக்கல் செய்யாது செலவு மீதிகளிற்கு பதிலீடு செய்து நிதிநிலைமை கூற்றில் காட்டப்பட்டிருந்தது. மேலும், கடன்படுனர் வெறுமதியில் காணப்பட்ட கூட்டுத் தொகை ரூபா 27,325,580 ஆன செலவு மீதிகள் மற்றும் கூட்டுத் தொகை ரூபா 22,815,176 ஆன அலுவலக ஊழியர் கடன்படுனர், முற்பண வைப்பு மற்றும் முற்பண செலத்துதல் மற்றும் ஏனை கடன்படுனர் செலவு மீதிகளை இனங்கண்டு சீராக்குவதற்கு பதிலாக வரவு மீதிகளிற்கு பதிலீடு செய்யப்பட்டு இருந்தது.	தலைமை அலுவலக நிதிக்கூற்றுக்களில் நடைமுறை சொத்துக்களில் 5 ஆண்டுகளிற்கு அதிக காலமாக நிலவிவரும் வரவு மீதி ஓரளவு காணப்படுவதுடன் அவற்றில் சிலவற்றிற்கான மூல ஆவணங்களை கண்டறிய கடினம் ஆவதுடன் மேலும் சில கணக்கீட்டு தவறுகளினால் ஏற்பட்டுள்ளது. கணக்கீட்டு தவறுகளினால் ஏற்படடுள்ள சில மீதிகளை தற்போது தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	இலங்கை கணக்கீட்டு நியமம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் 31 மற்றும் 34 பந்தி பிரகாரம் சொத்து மீள்மதிப்பீடு செய்த பின்னர் மீண்டும் குறித்த காலப் பகுதியிக்குள் சொத்து மீள்மதிப்பீடு செய்ய வேண்டிய போதும் கம்பனியிளால் 2008 ஆண்டில் மீள்மதிப்பீட்டினை செய்த பின்னர் மீளாய்வாண்டு வரை சொத்து மீள்மதிப்பீடு செய்திருக்காததால் புதிய	எதிர்வரும் நிதியாண்டில் சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்வது தொடர்பில் முகாமைத்துவத்தின் கவனத்தை செலுத்த எதிர்பார்க்கப்படுகிறது.	இலங்கை கணக்கீட்டு நியமம் பிரகாரம சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	மீள்மதிப்பீட்டு பெறுமதிகள் கணக்கு ஏடுகளில் உள்ளடக்கப்பட்டு இருக்கவில்லை.		
(இ)	இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 37 இன் 14 பந்தி பிரகாரம் நிகழ்கால கடப்படொன்று காணப்படல், அக் கடப்பாட்டை தீர்க்கும் போது வியாபாரத்தின் வளங்கள் வெளிப் பாயும் நிகழ்தகவு காணப்படல் மற்றும் அப் பெறுமதியை நம்பகமாக மதிப்பீடு செய்ய முடியுமாதல் ஆகிய விடயங்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் நிதிஏற்பாட்டை இனங்காண வேண்டிய போதும் கம்பனி தொடர்ந்தும் நட்டம் ஈட்டும் நிலையில் அது தொடர்பாக கவனம் செலுத்தாது 2020 ஆண்டு முதல் ஊக்குவிப்பு படிகளை செலுத்த ரூபா 2,180,689 நிதிஏற்பாடு நிதிக்கூற்றுக்களில் இனங்கண்டிருந்த காரணத்தால் நடைமுறை சொத்துக்கள் அந்த அளவால் கூட்டிக் காட்டப்பட்டது.	காணப்படும் நிதி அறிக்கை பிரகாரம் பொலொன்னருவ தொழிற்சாலையில் 2015 முதல் 2020 நிதியாண்டு வரை மிகையூதியத்திற்காக வருடாந்தம் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டுள்ளது, ரூபா 2,180,689 மிகையூதியம் செலுத்துவதற்காக நிதிஏற்பாடாக நிதிக்கூற்றுக்ளில் காட்டப்படுவது 2020 ஆண்டு முதல் முன்கொண்டு வரப்படும் மீதியாகும், அதனை 2024 நிதிக்கூற்றுக்களில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்,	இலங்கை கணக்கீட்டு நியமம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)	இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் இலக்கம் 09 இன் 5.5.15 பந்தி பிரகாரம் வியாபார கடன்படுனர் மீதியான ரூபா 510,957,806 இற்காக பிற்கால சேதத்தை இனங்காணலை அளப்பதற்காக எதிர்பார்த்த கடன் நட்ட முறையை (Expected Credit Loss Method) பயன்படுத்த வேண்டிய போதும் அவ்வாறு கணக்கிடாத காரணத்தால் மீளாய்வாண்டில் வியாபார மற்றும் ஏனைய கடன்படுனர் மிகை கணக்கீடாகியிருந்தது.	சரியாக கடன்படுனர் காலப் பகுப்பாய்வை தயாரித்த பின்னர் கடன்படுனரிற்காக எதிர்பார்க்கும் கடன் நட்ட முறையை பயன்படுத்தி குறித்த ஒதுக்கீட்டை கணக்குகளில் மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.	இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	மீளாய்வாண்டில் கம்பனியின் நிதி நிலைமை கூற்றின் பிரகாரம் சிறுசெலவு முற்பண மீதி ரூபா 3,784,814 ஆக காட்டப்பட்ட போதும், தலைமை அலுவலகத்தில் நிதிக்கூற்றுக்களில் நீண்ட காலமாக	இந்த மீதிகள் பல ஆண்டுகளாக கணக்குகளில் காணப்படுகின்ற மீதிகளாவதுடன் குறித்த மீதிகளிற்கு அடிப்படையான சான்றுகள் மற்றும்	சிற செலவு முற்பண மீதியினுள் காணப்படும் ஏனைய 03 கணக்குகளின் நீண்டகாலமாக நிலவிவரும் செலவு

	நிலவிவரும் ஏனைய 03 கணக்குகளின் செலவு மீதி கூட்டுத் தொகை ரூபா 1,763,306 நிலவி காரணத்தால் கம்பனியின் நிதிக்கூற்றின் சிறு செலவு முற்பணம் மீதி குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது.	தகவல்களை இன்னகண்ட பின்னர் எதிர்வரும் கணக்காண்டினுள் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.	மீதிகளை பகுப்பாய்வு செய்து காரணங்களை இனங்கண்டு தேவையான சீரக்கம் செய்ய வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டு இறுதியில் நிதிக் கூற்று குறிப்பு இலக்கம் 05 பிரகாரம் நீண்ட கால முற்பண மீதியான யூரோ 201,218 பரிமாற்ற அன்னிய செலாவணி இலாபம் ரூபா 34,074,094 ஆக வேண்டிய போதும் அதனை ரூபா 35,479,314 ஆக கணக்கீடு செய்துள்ளதால் அன்னிய செலாவணி இலாபம் ரூபா 829,207 இனால் கூட்டிக் காட்டப்பட்டது.	www.exchangerates.org.uk எனும் இணையத் தளத்திற்கு யூரோ இற்காக காணப்படும் அன்னிய செலாவணி விகிதத்தை அடிப்படையாக் கொண்டு 2023.12.31 திகதிக்கு குறித்த முற்பாண பெறுமதி கணக்கிடப்பட்டுள்ளது.	அன்னிய செலாவணி பரிமாற்றம் செய்யப்படும் போது ஏற்றுக் கொண்ட மிகவும் சாத்தியமான அன்னிய செலாவணி விகிதமொன்றை பயன்படுத்தி அன்னிய செலாவணி பரிமாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டு இருந்த ரூபா 1,664,030,771 ஆன இருப்பு மீதியினுள் சில ஆண்டுகளாக தொடர்ந்து முன்செல்லும் பௌதீக ரீதியாக கம்பனியிடம் காணப்படாத ரூபா 31,928,087 ஆன மூலப்பொருள் இருப்பொன்றும், ரூபா 10,327,148 ஆன முடிவுப் பொருள் இருப்பொன்றும், 2018 ஆண்டு முதல் இருப்பினுள் உள்ளடங்கி இருந்த போதும், மீளாய்வாண்டு இறுதி வரை இதற்காக ஒதுக்கீட்டை நிதிக்கூற்றுக்களில் மேற்கொண்டிருக்கவில்லை. மேலும் ரூபா 20,713,467 ஆன ஏனைய இருப்பு மீதி தொடர்பான தகவல்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை.	இறுதிக் கணக்கில் காணப்படும் ரூபா 31 மில்லியனான மூலப்பொருள் மற்றும் ரூபா 10 மில்லியனான முடிவுப்பொருள் இருப்பு மீதிகள் கணக்குகளில் காணப்பட்ட போதும் தற்போது இருப்பு பௌதீக ரீதியாக கம்பனில் காணப்படவில்லை. ரூபா 20.7 மில்லியனான ஏனைய மீதிகள் தொடர்பாக தகவல்களை இனங்கண்ட பின்னர் கணக்குகளிற்கு இடையே சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.	சில ஆண்டுகளாக தொடர்ந்து முன்செல்லும் பௌதீக ரீதியாக கம்பனியிடம் காணப்படாத இருப்பு தொடர்பாக ஒதுக்கீட்டை நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ள வேண்டியதுடன் இருப்பு மீதிகள் தொடர்பான தகவல்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
(ஈ)	2025 ஏப்ரல் 01 திகதிய இலக்கம் TO/REV/05/33/6 கொண்ட திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்தின் உறுதிப்படுத்தலின் பிரகாரம் படல்கம பால் பதனிடும் நிலையத்தை இஸ்தாபிக்கும் செயற்திட்டத்திற்கு துணைக் கடன் வழங்கவில்லை என மற்றும் அது 2021 ஆண்டில் கமநல அமைச்சின் 118-2-3-54-2507-0/12 கீழ் அரசின் முதலீடாக கணக்கீடு சயெ்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ள போதும் கம்பனியினால் திறைசேரிக்கு செலுத்த வேண்டிய	இது தொடர்பாக மேலும் கண்டறிந்து பொறுப்பான தரப்பினரிடமிருந்து விடையங்களை வினவி மற்றும் குறித்த அங்கீகாரங்களை பெற்றுக் கொண்ட பின்னர் இந்த கடன் மீதிகளை கம்பனியின் கணக்குகளிலிருந்து அகற்ற எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	கடன் மீதியாக ரூபா 12,641,310,517 தொகை 2023 திசெம்பர் 31 திகதிக்கு நிதிக்கூற்றுக்களில் காண்பித்துள்ளது.		
(உ)	கம்பனியின் கணக்கு கொள்கை பிரகாரம் வட்டி வருமானம் அட்டுறு அடிப்படையில் இனங்காண்பதாக குறிப்பிட்டுள்ள போதும் அட்டவணை பிரகாரம் உள்நாட்டு வட்டி வருமானம் பண அடிப்படையில் இனங்கண்டுள்ள காரணத்தால் மீளாய்வாண்டில் கிடைக்க வேண்டிய வட்டி வருமானமான ரூபா 6,377,034 தொகை நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்படவில்லை.	உள்நாட்டு வைப்பு குறுகிய கால முதலீடாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளதால் அங்கு வட்டி வருமானம் பண அடிப்படையில் இனங்காணப்படுகிறது. எவ்வாறாயினும் எதிர்வரும் ஆண்டுகளில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது கணக்கு கொள்கை மூலம் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.	கணக்கு கொள்கை பிரகாரம் வட்டி வருமானம் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஊ)	2007 ஆண்டில் தனியார் நிறுவனம் ஒன்றிலிருந்து அவ்வப் போது கிடைந்த கூட்டுத் தொகை ரூபா 12,005,844 ஆன மானியம் பிற்போடப்பட்ட வருமானமாக வருடாந்தம் நிதிக்கூற்றுக்களில் இனங்காண்பதற்கு பதிலாக நிதிக்கூற்றுக்களில் ஏனைய தரப்பினரிற்கு செலுத்த வேண்டிய மீதியின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	தனியார் நிறுவனம் ஒன்றிலிருந்து கம்பனிக்கு கிடைத்த நிதி மானியம் அம்பலங்கொட பால் குளிரூட்டும் நிலையத்தின் நிர்மாணப் பணிகளிற்காக ஈடுபடுத்தியதாக தகவல் இனங்காணப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் குறித்த மீதிகளை எதிர்வரும் ஆண்டில் இறுதிக் கணக்குகளில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.	மானியங்கள் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(எ)	நிதிக்கூற்றுக்களில் இருப்பிற்காக ரூபா 12,096,362 தொகை ஒதுக்கியுள்ளதுடன் இதனுள் காணப்படும் பயன்படுத்த முடியாத இருப்புக்களை இனங்கண்டு புத்தகங்களிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	இங்கு இருப்பு பற்றாக்குறை இடம்பெற்று இல்லாததுடன் இற்றைக்கு பல ஆண்டுகளிற்கு முன்னர் களஞ்சியத்தில் காணப்பட்ட பயன்படுத்த முடியாத இருப்பிற்காக கணக்குளில் ஒதுக்கீடு மாத்திரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இவ்வாறான இருப்பு காணப்படுகின்றதா என பரீட்சித்து பார்த்து கணக்குகளில் இருந்து அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும	நிறுவனத்தின் இருப்பு கட்டுப்பாட்டை முறையாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

	விடயம்	தொகை ரூபா	சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	தேசிய பால் சபைக்கு செலுத்த வேண்டிய மீதி	2,108,063	மீதி உறுதிப்பாடு, காலப்பகுப்பாய்வு	இந்த மீதிகள் பல வருடங்களாக கணக்குகளில் நிலவி வரும் மீதிகளாவதுடன் அவற்றை உறுதி செய்வதற்கான எவ்வித மூல ஆவணமும் கம்பனியில் தேடிக் கொள்ள முடியாது.	மூல ஆவணஙகளை பரீட்சித்து கொடுக்கல் வாங்கல்களை கணக்கீடு செய்ய நடவடிககை எடுக்க வேண்டும்.
(ஆ)	பொல்கஹவெல தொழிற்சாலையின் வியாபார கடன்கொடுனர் மீதியின் கீழ் குறிப்பிடப்படும் செலவின கடன்கொடுனர் மீதி.	25,570,814	மீதி உறுதிப்பாடு, காலப்பகுப்பாய்வு	குறித்த தொகை 2024 ஆண்டில் குறித்த வழங்குனரிற்கு செலுத்தி நிறைவு செய்ய கம்பனியினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எஞ்சிய மீதியை 2024 கணக்குகளில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.	கடன்கொடுனர் மீதிக்குறிய காலப் பகுப்பாய்வை பெற முடியுமானவாறு கணக்கீட்டு நடவடிக்கைகளை பேணிச் செல்ல மற்றும் கடன்கொடுனரிற்கு உரியவாறு கொடுப்பனவு செய்ய வேண்டும்.
(இ)	தலைமை அலுவலகத்தில் மற்றும் கொழும்பு தொழிற்சாலை கடன்படுனர் பெறுமதி.	388,525,297	காலப்பகுப்பாய்வு, அட்டவணைகள்	தலைமை அலுவலகத்தில் மற்றும் கொழும்பு தொழிற்சாலைக்குரிய காலப் பகுப்பாய்வை எதிர்வரும் நிதியாண்டுகளில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	காலப்பகுப்பாய்வு, அட்டவணைகளை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)	தனியார் கம்பனி ஒன்றிற்கு செலுத்த வேண்டிய வியாபார கடன்கொடுனர் மீதி.	30,661,317	மீதி உறுதிப்பாடு.	குறித்த உறுதிப்பாட்டு ஆவணங்ளை தருமாறு வழங்குனர்களை அறிவுருத்தி பதிவுத் தபாலில் கடிதம் அனப்பியுள்ளதுடன் மீண்டும் மின்அஞ்சல் மூலமும் நினைவூட்டல் வழங்கப்பட்டுள்ளது.	மீதி உறுதிப்பாட்டை சமர்ப்பிக்க மற்றும் செலுத்த வேண்டிய தரப்பினரை இனஙகண்டு மீதிகளை தீரக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு

1.6.1 பெறவேண்டிய தொகை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
திகன, பொலொன்னருவ மற்றும் அம்பேவல ஆகிய 3 கைத்தொழிற்சாலைகளில் ரூபா 93,993,204 ஆன கடன்படுனர் மீதியினுள் கூட்டுத் தொகை ரூபா 20,678,111 ஆன 05 ஆண்டுகளை விஞ்சிய வியாபார கடன்படுனர் மீதி காணப்பட்ட போதும் அந்த மீதியை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	அனைத்து தொழிற்சாலைகள் மற்றும் தலைமை அலுவலகத்திற்குரிய கடன்படுனர் மீதியனுள் காணப்படும் ஐந்து ஆண்டுகளை விஞ்சிய மீதிகள் தொடர்பாக பகுப்பாய்வு செய்ய தற்போது ஆரம்பிக்கப்பட்டு உள்ளதுடன் தகவல்களை இனங்கண்டு உறுதி செய்து கொண்ட பின்னர் அறவிட நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவை கடன்படுனர் மீதியை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.6.2 செலுத்த வேண்டிய தொகை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	தலைமை அலுவலகத்தில் ரூபா 256,943,646 ஆன கடன்கொடுனர் மீதிக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட வயது பகுப்பாய்வு பிரகாரம் 05 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 11,205,608 ஆன மீதி காணப்பட்டதுடன் அப்பெறுமதியை தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	குறித்த மீதியனுள் 2 நிறுவனங்களிற்குரிய மீதிகளை 2024 கணக்காண்டினுள் தீர்க்க நடவடிக்கை எடுத்துள்ளதுடன் ஏனை மீதிகள் தொடர்பாக சரியான தகவல்களை வெளிப்படுத்திக் கொண்ட பின்னர் கணக்குகளில் சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.	சரியான தகவல்களை வெளிப்படுத்திக் கொண்ட பின்னர் மீதிகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	நிதிநிலைமை கூற்றில் செலுத்த வேண்டிய ஏனைய மீதிகளிலுள்ள ரூபா 22,169,976 ஆன மானியம் அலுவலகத்தில் ஏனைய தரப்பினரிற்கு செலுத்த வேண்டிய மீதியினுள் 21 ஆண்டுகள் பழைய ரூபா 7,795,228 ஆன செலுத்த வேண்டிய நிறுத்து வைத்த வைப்புக்கள் காணப்பட்ட போதும் அம் மீதிகளை தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	கம்பனியினால் நிறுத்தி வைத்த வைப்புக்களை மீள் செலுத்தப்படுவது குறித்த தொகை நிறுத்தி வைத்தல் காலப்பகுதி முடிவடைந்த பின்னர் குறித்த சேவை வழங்குனர்களினால் நிறுத்தி வைத்தல் தொகையை மீளளிக்குமாறு கோரியதன் பின்னராவதுடன் தற்போது வரை அந்த சேவை வழங்குனர்களினால் அத் தெதாகையை மீண்டும் கோரவில்லை.	சரியான தகவல்களை வெளிப்படுத்திக் கொண்ட பின்னர் மீதிகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.7 சட்டம், விதி, பிரமாணம் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்

	சட்டம், விதி, பிரமாணம் என்பவற்றுடனான தொடர்பு	இணங்காமைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	2021 நவம்பர் 16 இன் 1/2021 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் செயற்பாட்டு கைநூலில் 6.6 பந்தி மற்றும் வழிகாட்டியின் 3.1 வழிகாட்டி	கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களிற்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த அறிக்கையை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டிய போதும் 2023 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் சமர்பிக்கப்பட்டிருந்தது 2025 மே 23 ஆம் திகதியாகும். அதன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்க 448 நாட்கள் தாமதித்திருந்தது. மேலும் பொது முயற்சிகளிற்கு உரியதான வழிகாட்டியின் இணைப்பு 3 இல் குறிப்பிடப்படுமாறு வரைவு வருடாந்த அறிக்கையை தயாரித்து நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பித்திருக்கவில்லை.	கருத்து தெரிவிக்கவில்லை.	சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வருடாந்த அறிக்கையை தயாரித்து கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும்.
(ஆ)	பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1.(ஆ) வழிகாட்டி	கம்பனியினால் குறைந்தபட்சம் மூன்று ஆண்டு காலத்திற்காக பிரதான பெறுகைகள் திட்டத்தை மற்றும் 2023 ஆண்டிற்காக நிதமும் நாளாதுவரையாக்கிய பெறுகைகள் திட்டமொன்றை தயாரித்திருக்கவில்லை.	கருத்து தெரிவிக்கவில்லை.	பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் பெறுகைகள் திட்டத்தை தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.8 நிதி முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	வங்கி மேலதிகபற்றிற்காக ஐக்கிய அமெரிக்க டொலர் நிலையான வைப்பை பிணையாக வைத்து பெற்றுள்ள ரூபா 1,200,000,000 ஆன வங்கி மேலதிகபற்று வசதிக்காக மீளாய்வாண்டில் செலுத்திய மேலதிகபற்று வட்டி செலவு ரூபா 323,947,216 ஆனதுடன் அதற்குரிய நிலையான வைப்பு வருமானம் ரூபா 124,359,900 ஆனதில் ரூபா 199,587,316 ஆன மேலதிக	2023 ஆண்டில் பெற்றுக் கொண்ட மேலதிகபற்று வசதியை பயன்படுத்தியுள்ள அளவின் பிரகாரம் வங்கியினால் அதற்குரிய வட்டியை அறவிட்டுள்ளதுடன் அதனை பிணையாக வைத்துள்ள நிலையான வைப்பிற்குரிய வட்டி வருமானத்தை விஞ்சியுள்ளது. எவ்வாறாயினும் மேலதிகபற்று வசதிக்குரிய வட்டி விகிதத்தை குறைத்துக் கொள்ள கோரிய போதும் வங்கி மேலதிகபற்றி	வங்கி மேலதிகபற்று மீதியை குறைத்துக் கொள்ள தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	கிரயத்தை குறைத்துக் கொள்வது தொடர்பில் கவனம் செலுத்தி இருக்கவில்லை.	வட்டி விகித்தை குறைக்கும் இயலுமை இல்லையென வங்கி கம்பனிக்கு அறிவித்துள்ளது.	
(ஆ)	நிதிநிலைமை கூற்றில் காண்பித்திருந்த ரூபா 1,689,978 பெறுமதியான கடன்தீர் நிதியம் பல ஆண்டுகளாக நிலவிவரும் மீதியாவதுடன் எதிர்வரும் ஆண்டுகளில் மேற்கொள்ளும் பால் கொள்வனவிற்கான நிதிரீதியான தேவைப்பாட்டின் மீது பயன்படுத்துவதாக நிதிக்கூற்றில் குறிப்பு இலக்கம் 12 கீழ் வெளிப்படுத்தியிருந்த போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	குறித்த நிதி பல் ஆண்டுகளாக நிலவிவரும் மீதியாவதால் மற்றும் இதற்கு சமமான தொகையை வேறு வங்கிக் கணக்கொன்றில் பேணிச் செல்லாததால் எதிர்காலத்தில் இந்த மீதியையும் கம்பனி உயர் முகாமைத்துவத்தின் தீர்மானத்தின் கீழ் நிறுத்தி வைத்த உழைப்பினுள் மீண்டும் உட்படுத்த எதிர்பார்ப்படுகிறது.	நிதிக்கூற்றில் குறிப்பு இலக்கம் 12 கீழ் வெளிப்படுத்தி உள்ளவாறு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.9 வரிப் பிரமாணங்களுடன் இணங்காமைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	நிதிக்கூற்றுக்களில் ஏனைய அரச நிறுவனங்களிற்கு செலுத்த வேண்டிய மீதியினுள் ரூபா 396,413 ஆன செலுத்த வேண்டிய பாதுபாப்பு வரிக்கான அபராதம் மற்றும் ரூபா 436,133 ஆன செலுத்த வேண்டிய உழைக்கும் போது அபராதத் தொகையாக கூட்டுத் தொகை ரூபா 832,546 ஆனது 2002 ஆண்டு முதல் நிலவிவருவதுடன் அம் மீதியை தீர்க்க மீளாய்வாண்டு வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	இது 2002 ஆண்டில் கணக்கீடு செய்யப்பட்ட பெறுமதியாவதுடன் அன்மை காலமாக அந்த அபராதத் தொகையை செலுத்துமாறு எவ்வித அறிவித்தலும் கம்பனிக்கு விடுக்கப்படாததால் குறித்த தொகையை செலுத்த நடவடிக்கை எடுக்கவில்லை. எனினும் இந்த மீதி தொடர்பாக எதிர்காலத்தில் கண்டறிந்து தீர்க்க நடவடிக்கை எடுக்க எதிர்பார்க்கப்படுகின்றது.	குறிப்பு மீதியை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	பல ஆண்டுகளாக நிலவிவரும் ரூபா 8,425,296 ஆன செலுத்த வேண்டிய வருமான வரி அபராதத் தொகை மீதியை மீளாய்வாண்டு இறுதி வரை தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவிலலை.	செலுத்த வேண்டிய வருமான வரி அபராதத் தொகை சுமார் 2003 ஆண்டளவில் கணக்கீடு செய்துள்ளதனால் குறித்த மீதியை உறுதி செய்யும் தகவல்கள் கணக்கு பிரவினுள் இல்லை.	சரியான தகவல்களை வெளிப்படுத்திக் கொண்ட பின்னர் குறித்த வரித் தொகைளை செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 501,491,702 நட்டமொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 473,942,776 ஆனது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 27,548,926 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு

விற்பனை கிரயம், நிர்வாக செலவுகள் மற்றும் நிதிரீதியான செலவுகள் அதிகரித்தமை மற்றும் அன்னிய செலாவணி நட்டம் முக்கிய காரணமாக இருந்தது.

2.2 முக்கிய வருமான மற்றும் செலவி விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

கம்பனியின் ஏனைய வருமானம் கடந்த ஆண்டிற்கு ஒப்பாக 92 சதவீதத்தினால் குறைய கடந்த ஆண்டின் அன்னிய செலாவணி இலாபம் மீளாய்வாண்டின் அன்னிய செலாவணி நட்டமொன்றானமை முக்கிய காரணமானது. மேலும் நிதி வருமானம் 8.11 சதவீதத்தால் குறைந்துள்ளதுடன் நிதி செலவுகள் 178 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டிற்கு ஒப்பாக நிர்வாக செலவு மற்றும் ஏனைய செலவுகள் முறையே 24 சதவீதத்தினால் மற்றும் 907 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

2.3 விகிதப் பகுப்பாய்வு

(அ) மீளாய்வாண்டில் மொத்த இலாப விகிதம் 10.11 சதவீதமானதுடன் தேறிய நட்ட விகிதம் 3.11 ஆனது. அவ்வாறே ஒரு பங்குக்கான உழைப்பு மீளாய்வாண்டில் மறை 0.55 ஆனதுடன் முன்னைய ஆண்டில் அது மறை 0.54 ஆனது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் பங்கு மூலதனத்திற்கு வருமானம் ஈட்டப்பட்டிருக்காததுடன் நிறுவனத்திற்ன் செயற்பாட்டு வினைத்திறமையின்மை மற்றும் செயலாற்றுகை பலவீனமான மட்டத்தில் காணப்பட்டமை கம்பனியின் நிலைத்திருக்கும் தன்மை தொடர்பில் பாதகமாக தாக்கம் செலுத்தியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

(ஆ) கம்பனியின் புறழ்வு விகிதம் அதாவது மொத்த சொத்துக்கள் மற்றும் மொத்த பொருப்புக்களை கவனத்திற் கொள்ளும் போது மொத்த சொத்துக்களை விஞ்சி பொறுப்புக்கள் காணப்படாத போதும் மீளாய்வாண்டில் அந்த விகிதம் 0.72 ஆனது. அதாவது மொத்த சொத்துக்களுக்கு ஒப்பாக கம்பனியின் மொத்த கடன் அளவு 72 சதவீதமானது. கடந்த ஆண்டில் இந்த விகிதம் 71 சதவீதமானது. மீளாய்வாண்டில் கம்பனியின் மொத்த மூலதனத்திற்கு கடன் விகிதம் 2.2 ஆனது. அதன் பிரகாரம் கம்பனியின் கடன் மூலதனம் உயர் பெறுமானத்தில் காணப்படுவதாகவும் சொத்து நிதியீட்டம் மூலதனத்தின் மீது மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவதானிக்கப்பட்டுள்ளது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ நலிவுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	1980 மார்ச் 10 திகதி நிலஅளவை செய்யப்பட்ட தளக்கோள இலக்கம் : 4754 கீழ் அரசிற்கு சொந்தமான 40 ஏக்கர் 01 ரூட் 36 பர்சஸ் ஆன அம்பேவெல தொழிற்சாலை இஸ்தாபிக்கப்பட்டள்ள காணியில் கம்பனியினால் ரூபா 5,548 மில்லியன் பெறுமதியான நிர்மாணம் மற்றும் பொருத்துக்கள் மேற்கொண்டுள்ள போதும் இந்த காணி உரிமையை 2023 திசெம்பர் 31 வரையும் கம்பனிக்கு சுவீகரித்திருக்கவில்லை.	அரசினால் 50 ஆண்டு குத்தகை அடிப்படையில் குறித்த காணி மற்றும் ஏனைய 37 காணிகளிற்காக கம்பனிக்கு குத்தகை உறுதி வழங்க கொள்கை ரீதியாக தீர்மானமொன்றை எடுத்துள்ள போதும் அந்த உறுதிகளை வழங்க அரசினால் இது வரை நடவடிக்கை எடுக்கவில்லை.	காணி உரிமையை கம்பனிக்கு சுவீகரித்துக் கொள்ள தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

(ஆ)	நடைமுறை வேலைகளில் உள்ளடங்கும் கெட்டபே விற்பனை நிலைய நிர்மாணம், திகன பால் தொழிற்சாலையின் ஐஸ் கிரீம் கப் மற்றும் கோண் நிரப்பும் இயந்திரத்தை பொருத்த மற்றும் பொல்கஹவெல, அம்பேவெல மற்றும் திகன தொழிற்சாலை நவீனமயமாக்கலிற்கு உரியதாக முறையே ரூபா 150,000, ரூபா 15,445,587 மற்றும் ரூபா 809,899,705 ஆன மீதிகள் 2012 ஆண்டிலிருந்து தொடர்ந்து முன்கொண்டு வரப்படுவதுடன் அந்த நிர்மாணங்கள் மற்றும் நவீனமயமாக்கல் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.	கண்டி கெட்டம்பே பிரதேசத்தில் விற்பனை நிலையத்தை நிர்மாணிப்பதனை இதுவரை நிறைவு செய்யாததால் அதற்காக செலுத்தியுள்ள ரூபா 150,000 தொகை நடைமுறை வேலையினுள் உட்படுத்தப்பட்டுள்ளது. திகன தொழிற்சாலைக்கு இதற்கு பல ஆண்டுகளிற்கு முன்னர் கொள்வனவு செய்துள்ள ரூபா 15,445,887 தொயையான ஐஸ் கிரீம் கப் மற்றும் கோண் நிரப்பும் இயந்திரத்தை இது வரை பயன்படுத்த முடியுமான மட்டத்திற்கு கொண்டுவரப் படாததனால் அதனையும் நடைமுறை வேலையினுள் உட்படுத்தப்பட்டுள்ளது. திகன தொழிற்சாலைக்காக ரூபா 809,899,705 செலவிட்டுள்ள போதும் இதுவரை அந்த நவீனமயமாக்கல் பணிகளை நிறைவு செய்யாததால் அப் பெறுமதியும் நடைமுறை வேலையினுள் உட்படுத்தப்பட்டுள்ளது.	நிர்மாணம் மற்றும் நவீன மயமாக்கல் செயற்பாடுகளை நிறைவு செய்து எதிர்பார்த்த நோக்கத்தை அடைந்து கொள்ள நடடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	மீளாய்வாண்டு இறுதி இருப்பு மீதியினுள் ரூபா 13,368,045 ஆன பால் குளிரூட்டும் இருப்பு மற்றும் Bottle & Deep Freezer இருப்பு தொடர்பாக பிற்கால பரீட்சிப்பின் போது அந்த இருப்புக்களை பகிர்ந்தளித்ததற்கான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	குறித்த பால் குளிரூட்டி இருப்பின் தகவல்களை வெளிப்படுத்திக் கொள்ளல் தற்போது மேற்கொள்ளப்படுவதுடன் குறித்த தகவல்கள் இனங்காணப்பட்ட பின்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வாறே போதல்கள் மற்றும் அதிகுளிரூட்டி மீதி கணக்கீட்டு தவறொன்று ஆகையால் 2024 கணக்காண்டில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.	குறித்த இருப்பை பகிர்ந்தளிப்பதற்கான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	2023 ஆண்டில் கம்பனியின் நலன்புரிக்காக 750 கிராம் பட்டர் பெகட் ஒன்று ரூபா 330 வீதம் 125,674 பெகட்களை ஊழியர்களிற்கு	எதிர்காலத்தில் இந்த உருப்படியை நலன்புரி அடிப்படையில் விற்பனை செய்யும் போது உற்பத்தி கிரயத்தை மேவுகை	உற்பத்தி கிரயத்தை மேவுகை செய்யும் விலையை அறவிட தேவையான நடவடிக்கைகளை எடுக்க

	விற்பனை செய்து ரூபா 41,472,420 வருமானம் ஈட்டப்பட்டிருந்தது. அதற்காக செலவிடப்பட்ட ரூபா 118,636,256 ஆன உற்பத்தி கிரயத்தை மேவுகை செய்யாத விலையை அறவிட்டதன் காரணமாக கம்பனிக்கு ஊழியர் நலன்புரிக்காக வழங்கியிருந்த பட்டர் பெக்கட்களினால் ரூபா 77,163,836 நட்டம் எற்பட்டிருந்தது.	செய்யும் விலையை அறவிட தேவையான நடவடிக்கைகளை எடுக்க எதிர்பார்க்கப்படுகிறது.	வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டின் விற்பனை அளவுகளை முன்னைய ஆண்டின் விற்பனை அளவுகளுடன் ஒப்பிடும் போது UHT பால் (plain) 900 ml உற்பத்தி அலகு 5,468,308 முதல் 2,948,320 வரை அதாவது 46 சதவீதத்தாலும், UHT பால் (plain) 450 ml உற்பத்தி அலகு 6,817,706 முதல் 4,416,517 வரை அதாவது 35 சதவீதத்தாலும் குறைந்திருந்தது.	விற்பனை குறைய முக்கிய காரணமானது கம்பனியின் பொலொன்னருவ தொழில்சாலையில் UHT உற்பத்தி இயந்திரம் 2023 ஏப்பர் மற்றும் மே மாதங்களில் முழுமையாக செயலிழந்ததும் திருத்தத்தின் பின் 2023 ஜுன், ஜுலை மற்றும் ஆகஸ்ட் ஆகிய மாதங்களில் உற்பத்தி இயந்திரத்தில் காணப்பட்ட கோளாறு நிலைமை காரணமாக இலக்கு வைக்கப்பட்ட உற்பத்தியை மேற்கொள்ள முடியவில்லை. அவ்வாறே 2022 ஆண்டிற்கு ஒப்பாக 2023 ஆண்டில் நிறுவனத்தினால் கொள்வனவு செய்த திரவப்பால் லீற்றர் அளவு குறைந்தமை கம்பனியின் இலக்கு வைத்த உற்பத்தி கொள்ளளவை அடைந்து கொள்ள முடியாதமையும் குறித்த விற்பனை குறைந்தமை காரணமாகவுள்ளன.	வருடாந்த உற்பத்தி மற்றும் விற்வனை இலக்குகளை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	கம்பனி உற்பத்தி செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள 5 தொழற்சாலைகளிற்கு இடையே அம்பேவல தொழற்சாலை மாத்திரம் 2022 மற்றும் 2023 ஆண்டுகளில் இலாபம் அறிக்கையிட்டிருந்தது. ஏனைய 4 தொழற்சாலைகளான திகன, பொல்கஹவெல, பொலொன்னருவ மற்றும் கொழும்பு ஆகிய தொழற்சாலைகள் 2022 மற்றும் 2023 ஆண்டுகளில்	பொதியிடல் உள்ளிட்ட அனைத்து மூலப்பொருட்களினதும் விலைகள் அதிகரித்தமை, அவற்றின் வழங்கல குறைந்தமை, நிலவிய பிரயாண மட்டுப்படுத்தலின் கீழ் பிரதான உள்ளீட்டு பொருளான திரவப்பால் பெற்றுக் கொள்வது கடினமானமை மற்றும் செயற்படு மூலதனத்தை	உற்பத்தி செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகளை இலாபம் ஈட்டும் நிலைக்கு ஆக்கிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	நட்டத்தை அறிக்கையிட்டிருந்ததுடன் அந்த 4 தொழற்சாலைகளில் 2022 மற்றும் 2023 ஆண்டுகளில் மொத்த நட்டம் முறையே ரூபா 1,000,747,087 மற்றும் ரூபா 345,248,601 ஆனது.	பெற்றுக் கொள்வதற்காக அதிக நிதிரீதியான கிரயத்தை மேற்கொள்ள வேண்டிய ஏற்பட்டமை, மீளாய்வு காலத்தினுள் மில்கோ நிறுவனம் நட்டமடைய காரணமானது. அவ்வாறே, அம்பேவல தொழற்சாலை மாத்திரம் இலாபம் அறிக்கையிட்டு ஏனைய தொழற்சாலைகள் நட்டம் அறிக்கையிட காரணமானது. மற்றைய தொழற்சாலைகளிற்கு ஒப்பாக அம்பேவல தொழற்சாலையில் செய்யப்படும் உற்பத்தி வகைகளிற்கு மட்டுப்படுத்தப்பட்ட மூலப்பொருட்கள் மூலப்பொருள் அளவுகள் மாத்திரம் தேவையாகையால் மற்றும் நிலவிய சிரமங்கள் காரணமாக ஏனைய தொழிற்சாலைகளில் உற்பத்தி மட்டம் குறைந்த செயற்பாட்டு கிரயம் அதிகரித்தமையுமாகும்.	
(ஈ)	கம்பனயினால் 2021 ஆண்டு முதல் 2023 ஆண்டு வயையான காலப்பகுதியினுள் சேகரித்த திரவர்பால் லீற்றர் அளவு ஒன்றுதிரட்ட எதிர்பார்த்த அளவிற்கு ஒப்பாக 67 சதவீதத்திற்கும் 71 இற்கும் இடையிலான வீச்சளவில் நிலவியதுடன் அதன் பிரகாரம் குறித்த காலப்பகுதியில் சேகரித்த திரவப்பாலின் அளவு லீற்றர் 67,905,259 முதல் 39,775,076 வரை தொடர்ந்து குறைந்திருந்தது. மேலும் குறித்த காலப்பகுதியினுள் நாட்டின் மொத்த திரவப்பால் உற்பத்தியின் கம்பனியினால் சேகரித்த பால் அளவின் சதவீதம் 13 இலிருந்து 08 வரை குறைந்திருந்ததாகவும் அவதானிக்கப்பட்டது.	2021 ஆண்டிற்கு ஒப்பாக 2022 ஆண்டில் பால் குறைவடைய போட்டி பால் சேகரிப்பாளர்கள் பால் தொழிலிற்கு சேர்நதமை, அவர்களால் பாலின் தரத்தை கவனத்திற் கொள்ளாது பால் கொள்வனவு செய்தமை காரணமானது. அவ்வாறே, 2022 ஆண்டிற்கு ஒப்பாக 2023 ஆண்டில் பால் குறைவடைய ஏனைய போட்டியாளர்களிற்கு ஒப்பாக, உரிய காலத்தில் மில்கோ நிறுவனத்தினால் பால் வலையை அதிகரிக்க இயலாது போனது முக்கிய காரணமானது.	கம்பனியின் உற்பத்திகளிற்கான முக்கிய மூலப்பொருளான பால் சேகரிப்பின் எதிர்பார்த்த இலக்கை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(உ)	கம்பனியினால் 2021 ஆண்டிற்கு ஒப்பாக 2023 ஆண்டில் உற்பத்தி செய்யத 11 உற்பத்தி வகைகளில்	உற்பத்திக்கான முக்கிய மூலப்பொருளான பசும்பால் சேகரிப்பது குறைந்தமைக்கு	கம்பனியின் சந்தை பங்கை பாதுகாத்துக் கொள்ள மற்றும்

	UHT பால், Sterilized பால், யோகட்,, நெய், பட்டர் மற்றும் பால்மா ஆகிய 06 உற்பத்தி வகைகயின் உற்பத்தி அலகுகளின் அளவு தொடர்ந்து குறைந்திருந்தது. 2021 ஆண்டிற்கு ஒப்பாக 2023 ஆண்டில் உற்பத்தி அலகுகளின் அளவு குறைந்தபட்ச அலகு 52,921 இற்கும் உச்ச அலகு 8,607,299 இற்குமிடையே வீச்சளவில் குறைந்திருந்ததாக அவதானிக்கப்பட்டது. கட்டிப்பால் மற்றும் ஐஸ்கிரீம் ஆகிய உற்பத்திகள் 2022 ஆண்டிற்கு ஒப்பாக நடைமுறை ஆண்டில் வளர்ச்சியை காட்டிய போதும், 2021 ஆண்டில் நிலவிய உற்பத்தி அலகு அளவு ஒப்பீட்டு ரீதியாக குறைந்திருந்தது.	ஒப்பாக உற்பத்தியும் குறைந்தது. காணப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட பால் அளவினால் சந்தை கேள்விக்கு ஏற்ப ஒவ்வொறு உற்பத்தி வகைகளிற்கு இடையே பகிர்ந்து உற்பதி மேற்கொள்ளப்படட்து.	அதிகரித்துக் கொள்ள போதியளவிலான உற்பத்தி செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஊ)	தொற்று நீக்கியபால் Sterilized, UHT பால், பட்டர், நெய் மற்றும் பால்மா ஆகிய உற்பத்தி செய்வதற்காக தொழிற்சாலைக்கு காணப்படும் கொள்ளவில் 50 சதவீத்திற்கு குறைந்த கொள்ளளவு பயன்படுத்தப்படுவதுடன் யோகட்,, ஐஸ்கிரீம் மற்றும் பாற்கட்டி ஆகிய உற்பத்திகளை செய்வதற்காக தொழிற்சாலைக்கு காணப்படும் உற்பத்தி கொள்ளளவில் 50 சதவீதத்திற்கும் 75 சதவீதத்திற்கு இடையிலான அளவு மாத்திரம் பயன்படுத்தப்படுகின்றது. மேலும் சீஸ் உற்பத்தி செயற்பாடுகள் திகன தொழிற்சாலையில் மாத்திரம் மேற்கொள்ளப்படுவதுட்ன அது உச்ச கொள்ளளவை அடைந்திருந்ததாக அவதானிக்கப்பட்டது.	உற்பத்திக்கான முக்கிய மூலப்பொருளான பசும்பால் சேகரிப்பது குறைந்தமைக்கு ஒப்பாக உற்பத்தியும் குறைந்தது. காணப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட பால் அளவினால் சந்தை கேள்விக்கு ஏற்ப ஒவ்வொறு உற்பத்தி வகைகளிற்கு இடையே பகிர்ந்து உற்பதி மேற்கொள்ளப்படட்து.	தொழிற்சாலைக்கு காணப்படும் உற்பத்தி கொள்ளளவை உச்சளவில் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(எ)	2021 ஆண்டு முதல் 2023 வரையான காலப்பகுதிக்குள் திரப்பால் விற்பனை அளவு லீற்றர் 20,538,423 முதல் லீற்றல் 13,258,335 வரை தொடர்ந்துபு குறைந்திருந்ததுடன் அது 2021 ஆண்டில் விற்பனைக்கு ஒப்பாக 35 சதவீதமாக அறவதானிக்கப்பட்டது. 2021 ஆண்டு முதல் 2023 வரையான காலப்பகுதிக்குள் யோக்கட், பசும்பால், பட்டர் மற்றும் பாற்கட்டி ஆகிய உற்பத்திகளின் விற்பனை அளவும் தொடர்ந்து குறைந்திருந்ததாக அவதானிக்கப்பட்டது.	மொத்த பால் உற்பத்தி குறைவுக்கு ஒப்பாக திரப்பால் உற்பத்தியும் குறைவடைந்தது. அவ்வாறே உற்பத்திக்கு ஒப்பாக விற்பனை அளவும் குறைவடைந்தது.	கம்பனியின் சந்தை பங்கை பாதுகாத்துக் கொள்ள மற்றும் அதிகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.